

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (16.6.2025) திருச்சிராப்பள்ளியில், மிளகுப்பாறை அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளியில் பயின்ற மாணவி த.ராகினி, தேசிய சட்டப் பல்கலைக் கழகங்களுக்கான பொது நுழைவுத் தேர்வில் (CLAT) தேர்ச்சி பெற்று ஜபல்பூரில் உள்ள தர்மசாஸ்திரா தேசிய சட்ட பல்கலைக் கழகத்தில் பயில தேர்வாகிவுள்ளதையொட்டி வாழ்த்துப் பெற்றார். அப்போது, முதலமைச்சர் அவர்கள் அம்மாணவிக்கு சால்வை அணிவித்து சிறப்பித்து, தன்னுடைய பேனாவை வழங்கினார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 16.6.2025 அன்று தேனி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில் ஒரு குழந்தைக்கு காதொலி கருவியினை பொருத்தி, கலந்துரையாடினார். இந்நிகழ்வில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச் செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் என்.இராமகிருஷ்ணன், ஆ.மகாராஜன், கே.எஸ். சரவணக்குமார், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங் உள்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! எம்.சாமிக்கண்ணு தலைமையில்

# திரு.வி.க. நகர் தெற்குப் பகுதி சார்பில் செம்மொழி நாள் மாபெரும் புகழரங்கம்!

## தொல்.திருமாவளவன் எம்.பி. - இரா.முத்தரசன் - பீட்டர் அல்போன்ஸ் புகழுரை!

*சென்னை, ஜூன்.18-*

சென்னை கிழக்கு மாவட்ட திமுக, திரு.வி.க.நகர் தெற்கு பகுதி சார்பில், ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்த நாள் "செம்மொழி நாள்" விழாவை முன்னிட்டு மாபெரும் புகழரங்கம் - தலைவர்விடுதலை சிறுத்தைகள் கட்சி தொல்.திருமாவளவன் எம்.பி, மாநில செயலாளர் சி.பி.ஐ, திரு.இரா.முத்தரசன், அகில இந்திய காங்கிரஸ் மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர் புகழுரைத்தனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக, திரு.வி.க.நகர் தெற்கு பகுதி சார்பில் ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்த நாள் செம்மொழி நாளை முன்னிட்டு "செம்மொழி 12" சுயாட்சி கற்றுத் தந்தவர்! சுயமரியாதை பெற்றுத் தந்தவர்! எனும் தலைப்பில் மாபெரும் புகழரங்கம் நேற்று (17.06.2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 6.00 மணியளவில், சென்னை, ஓட்டேரி, பிரிக்கிளின் சாலை சந்திப்பு, வெங்கடட்டம்மாள் சமாதி தெரு, ஐந்து விளக்கு அருகில் நடைபெற்றது.

இப்புகழரங்கத்தில் திரு.வி.க.நகர் தெற்கு பகுதி கழக செயலாளர் எம்.சாமிகண்ணு தலைமை வகித்தார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, இசட்.ஆசாத், புனிதவதிஎத்திராசன் எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, வானவில்விஜய், லயன்.பி.உதயசங்கர், டி.லோகேஷ், நா.துலுக்காணம், பி.ஜே.துளசிங்கம், இரா.வீரமணி, எம்.பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, எல்.பாண்டுரங்கன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அ.கோவிந்தன், பி.சுகுமார், த.கருணாநிதி, வனஜாசண்முகம், அ.கருணாநிதி, பெரம்பூர். ஆர்.ராஜன், எம்.தமீம், தே.சுரேஷ்குமார்(எ) பொல்லு சுரேஷ், வி.க.வெங்கடேசன், பா.பி.தாஸ், தமிழ்செல்வி சசிகுமார் எம்.சி, ரமணிலோகேஷ் எம்.சி, மு.சரவணன் எம்.சி, ச.அம்பேத்வளவன் எம்.சி. வரவேற்றனர்.





இம்மாபெரும் புகழரங் கத்தில் தலைவர்விடுதலை சிறுத்தைகள் கட்சி தொல்.திருமாவளவன் எம்.பி, மாநில செயலாளர் சி.பி.ஐ, இரா. முத்தரசன், அகில இந்திய காங்கிரஸ் மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர் புகழுரையாற்றினர்.


மேலும், இப்புகழரங்கத்தில் மாவட்ட செயலாளர் வி.சி.க. உஷாராணி, மாவட்ட செயலாளர் - சி.பி.ஐ. டி.கே.வெங்கடேஷ்வேம்புலி, மாவட்ட தலைவர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி ஜெ.டில்லிபாபு திரு.வி.க.நகர் வடக்கு பகுதி செயலாளர், செ.தமிழ்வேந்தன், தண்டலம் திரு.வி.க.நகர் தொகுதி பார்வையாளர் என்.கிருஷ்ணமூர்த்தி, கே.கோகுல் ர.கலைவேந்தன், திரு.வி.க.நகர் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் தில்லைகதிரவன், புல்லட்கி.ரமேஷ் பி.புவனவதி கினார்ஆறுமுகம், திரு.வி.க.நகர் வடக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் மா.ருத்ரமூர்த்தி ஜி.கிருஷ்ணகுமார் எஸ்.புஷ்பராஜ் எம்.ஏ.டீக்கா எம்.இசட்.அபோய் பரிமளாசுரேஷ்பாபு, திரு.வி.க.நகர் தெற்கு வடக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் வே.து.தாமரைச்செல்வன் எல்.சுப்பிரமணி வெல்டிங்எஸ்.பாபு அ.கதிரவன் இரா.புருஷோத்தமன் பா.பாபுமனேகரன் கி.நாக லிங்கம் நெல்லை.மா.முத்தையா எச்.திவாகர் அ.விஜயகுமார் கே.என்.ஸ்வீட்பாபு வி.ஜெகன்னாதன் எம்.விஜயகுமார் வ.நாமதேவன், டி.ராஜு க.எழிலன் எம்.துரைசாமி ஜெ.அண்ணாதுரை பி.இளஞ்செழியன் பி.சத்தீஷ் ஆர்.ராஜராஜன் டி.சீனிவாசன் பிரகாஷ், மாவட்ட பிற அணிகளின் துணை அமைப்பாளர்கள் கனல்கங்கா வழக்கறிஞர் அ.சேதுராமன் கோ.கருணாகரன் எம்.சண்முகவேல் எம்.எஸ்.மைனர்பாபு மெழுக்கர் கே.ஆர்.சதீஷ்,எம்.ஜெயபால் எஸ்.சதீஸ்குமார் கே.ராமமூர்த்தி கேபிள்எஸ்.சுரேஷ் சுரேஷ்கோபி ஆர்.சீனிவாசன் பி.விவேகானந்தன் ந.தமிழ்மணி

ஏ.ஜி.எஸ்.கோல்டுஜி, புர்ட்.என்.பாஸ்கர் பட்டாளம்.எம்.செந்தில்குமார் சாவித்திரி அன்பழகன் ஆர்.கிருஷ்ணவேணி டாக்டர்.வினோத் இளங்கோ ஜெ.அவினாஷ் எஸ்.கௌதம் எம்.அருண்குமார் எஸ்.வசந்தா எஸ்.ஜெயகுமார் கே.ஹரிபிரசாத் கே.சம்.கார்டன்.சத்தியா இளங்கோ மு.கௌரி வி.பிரகாஷ் வி.ஜெகன் எஸ்.விஜயலட்சுமி பா.ஜலபூஷனம் எஸ்.கே.சிவகுமார் இ.எஸ்.ரவிச்சந்திரன் கே.லட்சுமி ஆர்.தினேஷ் மு.முகமதுரஃபி எப்.செபஸ்டீன் எம்.விக்னேஷ் அந்தோணிஜான் இ.ஜோசுவா ஜெ.சத்யமோகன் டி.சங்கர் புரசை பி.சத்திஸ்குமார் அ.சாக்ரடீஸ் இ.என்.கே.வீரமணி எல்.ஜான்ரூவில் கே.காதர்மீரான் மு.விஜயகுமார் ஜி.சூர்யகுமார் எம்.ஜி.குமாரசாமி ஆர்.நிலவழகன் ஜெ.வசந்த்கோகுல் பி.செந்தில் ஆர்.சுரேஷ், திரு.வி.க.நகர் தெற்கு வடக்கு பகுதி அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் ப.ஸ்ரீதர்ராஜன் எம்.சக்திவேல் ஈஸ்வரிகண்ணன் சாந்திமாசிலாமணி மு.தர்மராஜ் ஜெ.மணிகண்டன் ஜெ.எம்.நிறைமொழி ஏ.சகிலா இரா.பிரியாமகேஸ்வரி எஸ்.ராஜேஷ் எஸ்.விஜய்மகேந்திரன் தியாகராஜன் ஜெகதீஷ் சி.ராஜ்குமார் ர.மானோஜ்குமார், திரு.வி.க.நகர் தெற்கு வட்ட கழக நிர்வாகிகள்: 76வது வட்டம் : ஜி.ஏழுமலை ஆ.குருமூர்த்தி ரா.ஞானசௌந்திரி கே.முருகா என்.எம்.செந்தில் சரவணன் கே.முரளி(எ)குள்ளா டி.நீதிதேவன் வி.டில்லிராஜ் பி.மலர், கே.சிவபாதம் எஸ்.சோனிரமேஷ் ஆர்.சுரேந்திரன் லலிதாமுத்து கே.பி.சுரேஷ் இரா.கார்த்திக் சி.நோவிஸ் வே.ராம்குமார் சி.தர்மன் பி.தமிழ்வாணன், கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இப்புகழரங்கத்தில் வட்ட கழக செயலாளர் எஸ்.சசிகுமார், எஸ்.வெங்கடேசன் நன்றி கூறினார்கள்.

# ஆர்.எஸ்.தம்பி குடும்பத்திற்கு இளைஞர் அணி நிதி உதவி!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!



*ஈரோடு, ஜூன்.18-*

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் கழக இளைஞர் அணி செயலாளராக இருந்தபோது, ஈரோடு நகர இளைஞர் அணி அமைப்பாளராக ஆர்.எஸ்.தம்பி கழகத் தலைவர் தலைமையில் திருமணம் செய்தவர், கழகத் தலைவர் அவர்களை அழைத்து நிகழ்ச்சிகள் நடத்தியவர் என ஈரோட்டில் இளைஞர் அணியை வளர்க்க பாடுபட்டவரான ஆர்.எஸ்.தம்பி, சமீபத்தில் உடல் லக்குறைவால் மறைவெய்தினார்.

இந்த நிலையில், அவரது குடும்பத்தினருக்கு கழக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் ரூ.50,000 நிதி உதவியாக வழங்க இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியிருந்தார்.

அதன்படி, ஈரோடு மாநகரக் கழகச் செயலாளர் மு.சுப்பிரமணியம், இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி. ஆகியோர் முன்னிலையில், அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆர்.எஸ்.தம்பி குடும்பத்தாரிடம் நிதியை வழங்கினார்.

ஊத்துக்குளி மத்திய ஒன்றிய செயலாளர் ராஜா, இளைஞர் அணியின் ஈரோடு தெற்கு மாவட்ட அமைப்பாளர் திருவாசகம், ஈரோடு மாநகர அமைப்பாளர் சேந்தபுகழன், முன்னாள் மாவட்ட அமைப்பாளர் பி.கே.பழனிசாமி மற்றும் இளைஞர் அணி பகுதி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் உடனிருந்தனர்.

### சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் - ரூ 33.23 கோடி மதிப்பிலான திட்டப்பணிகளைத் திறந்து வைத்தார்!

## 1512 பயனாளிகளுக்கு ரூ 24 கோடி மதிப்பில் அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்!

சென்னை, ஜூன்.18-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.06.2025) சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாக மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில் பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைகளின் சார்பில் 33.23 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 36 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, சுற்றுலாத்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைகளின் சார்பில் 4.58 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில் பல்வேறு அரசு துறைகளின் சார்பில் 1,512 பயனாளிகளுக்கு 24.24 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

துணை முதலமைச்சர் அவர்கள் நேற்று சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற விழாவில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 320 பயனாளிகளுக்கு 1.84 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான இலவச வீட்டு மனைப் பட்டாக்களுக்கான ஆணைகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும், கூட்டுறவுத்துறையின் சார்பில் 708 பயனாளிகளுக்கு 10.30 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பல்வேறு வகையான கடனுதவிக்கான காசோலைகளையும், வேளாண்மை உழவர் நலத் துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களின் கீழ் 65 விவசாயிகளுக்கு 50.80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

தொடர்ந்து, தமிழ்நாடு ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) சார்பில் 57 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு, 5.07 கோடி ரூபாய்க்கான வங்கிக்கடன் இணைப்புகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 27 மாற்றுத்திறனாளிகளுக்கு மொத்தம் 2.33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான மடக்கு சக்கர நாற்காலி, மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் முதலமைச்சர் வீடுகள் மறுகட்டமானத் திட்டத்தின் கீழ் 169 பயனாளிகளுக்கு 4.56 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மறுகட்டுமானத்திற்கான ஆணைகளையும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 100 பயனாளிகளுக்கு சீர்மரபினர் நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டைகளையும், பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் 50 மாணவர்களுக்கு 37.50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான விபத்துக் காப்பீடு வைப்பு நிதி பத்திரங்களையும், முன்னோடி வங்கியின் சார்பில் 16 மாணவர்களுக்கு 1.55 கோடி ரூபாய் கல்வி உதவித்தொகைக்கான ஆணைகளையும் என மொத்தம் 1,512 பயனாளிகளுக்கு ரூபாய் 24.24 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங்குடி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி, ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி கா.வானதி, சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ், உள்பட அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நாளை 19-ஆம் தேதி காலை

### இயந்திர உதிரிபாகங்கள் கண்காட்சியை துவக்கி வைக்க வருகை தரும்

# கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்போம்! - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

*சென்னை, ஜூன்.18-*

நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நாளை 19-ஆம் தேதி காலை நடைபெறும் இயந்திர உதிரிபாகங்கள் கண்காட்சியை துவக்கி வைக்க வருகை தரும் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர் திரண்டு வந்து, கண்டோன்மெண்ட் - பட்ரோடு அண்ணா சிலை அருகில் நாளை காலை 9.30 மணியளவில் மாபெரும் வரவேற்பு அளித்திட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:-

நாளை 19-ஆம் தேதி காலை 10.00 மணியளவில் ஆலந்தூர் தொகுதி, நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் உள்ள கூட்ட அரங்கில் அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர் சங்கம் நடத்தும் இயந்திர உதிரிபாகங்கள் கண்காட்சி-2025 துவக்க விழா நடைபெறவுள்ளது.

இந்த துவக்க விழாவில் கழகத் தலைவர் - முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று இயந்திர உதிரிபாகங்கள் கண்காட்சியை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றுகிறார்.

இவ்விழாவிற்கு வருகைத் தரும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டோன்மெண்ட் அண்ணா சிலை அருகில் நாளை காலை 9.30 மணியளவில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இக்கண்காட்சியை துவக்கி வைக்க வருகை தரும், நம்முடைய உயிரனைய தலைவர் முதல்வர் தலைவர் தளபதி அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் கண்டோன்மெண்ட் பட்ரோடு, அண்ணா சாலை அருகில் மேள-தாளம், பேண்டு வாத்தியம் முழங்க பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட - மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் - கழக நிர்வாகிகள் - தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.



முதலமைச்சர் அவர்களின் புதிய விரிவான மினி பேருந்து திட்டத்தில் புதிய வழித்தடங்கள் மற்றும் புலம்பெயர் வழித்தடங்களுக்கான மினி பேருந்து சேவைகளை நெல்லை பெரியார் சந்திப்பு பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் முஅப்பாவு,நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, மீன்வளம் – மீனவ நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மரு.இரா. சுகுமார்,நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன், ஆணையாளர் சுகபுத்ரா,துணை மேயர் ராஜ்,முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான் ஆகியோர் முன்னிலையில் கொடியசைத்து துவக்கி வைத்தனர்.